

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அளவிலான மிஸ்டர் செங்கை காஞ்சி ஆணழகன் போட்டி 2025 – மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், போட்டி இயக்குநர் சி.திலிப் ஆகியோர் ஏற்பாட்டில் கழக அமைப்புச் செயலலாளர் ஆர்.எஸ். பாரதி நேற்று 27.07.2025 தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இதில் பகுதிச் செயலாளர்கள் என். சந்திரன் எம்.சி., ப.குணாளன், வட்டச் செயலாளர் ஜெ.நடராஜன், டி.ஜெசுதாஷ், சத்தியா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஏ.வி.சுரேஷ்குமார் ஏற்பாட்டில்

# திருப்புலிவனத்தில் மாணவர்களிடம் ‘ஓரணியில் தமிழ்நாடு’ விழிப்புணர்வுப் பிரசுரம் வழங்கல்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார் – க.செல்வம் எம்.பி. – கெ.ஞானசேகரன் பங்கேற்பு!

*காஞ்சிபுரம், ஜூலை 28 -*

ஓரணயில் தமிழ்நாடு விழிப்புணர்வு பிரச்சாரம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக உத்திரமேரூர் ஒன்றியம் திருப்புலி வனம் அரசு கலைக் கல்லூரி மாணவர்களிடம் துண்டுப் பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஏ.வி. சுரேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., துவக்கி வைத்து சிறப்பித்தார். இதில் க.செல்வம் எம்.பி. ஒன்றியச் செயலாளர் கெ. ஞானசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



வெல்வோம் 200 படைப்போம் வரலாறு சுயமரியாதை சூரியன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் 24-07-2025 வியாழக்கிழமை காலை 8:30மணி அளவில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் “ஓரணியில் தமிழ்நாடு” விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உத்திரமேரூர் ஒன்றியத்தில் உள்ள திருப்புலிவனம் அரசு கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களிடம் துண்டறிக்கை வாயிலாக பிரச்சாரம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் மாணவர்களிடம் துண்டறிக்கை விநியோகத்தை துவக்கி வைத்து அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார். காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

மேலும் இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் ஒன்றிய குழு உறுப்பினர் . ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர் என்.எஸ்.பாரி வள்ளல், மாணவரணி தொகுதி பொறுப்பாளர் ஏ.வி.சுரேஷ்குமார் (மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்) ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

இந்நிகழ்வில் தலைமை கழக, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக அணிகளின் நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மும்பையில் ‘லெமுரியா அறக்கட்டளை’ – ‘தமிழ் காப்போம்’ அமைப்புகள் இணைந்து நடத்திய

# தவத்திரு. குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு நிறைவு விழா - படத்திறப்பு!

## சு.குமணராசன் தலைமை—புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரை!

*மும்பை, ஜூலை 28-*

தமிழ்ப் பற்றும் மிகுந்த சமுகப் பற்றும் கொண்ட துறவி தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மும்பையில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் (26.07.2025-சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் பாண்டுப், பிரைட் மேல்நிலைப் பள்ளி வளாகம் கல்வித்தந்தை தேவதாசன் அரங்கில் நடைபெறும் இவ்விழாவில் தி.மு.க கல்வியாளர் அணித் தலைவர் புலவர் செந்தலை ந.கவுதமன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இலெமுரியா அறக்கட்டளைத் தலைவர் சு.குமணராசன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தமிழ்க் காப்போம் ஒருங்கிணைப் பாளர் இறை ச. இராசேந்திரன் வரவேற்புரையாற்றினர்.

குன்றக்குடி அடிகளார் படத்தை மும்பை திராவிடர் கழகத் தலைவர் பெ. கணேசன் திறந்து வைத்தார்.

விழாவிற்கு ஜேம்ஸ்தேவதாசன், எஸ்.அண்ணாமலை, பொற்கோ அன்பழகன், கி.தனுஸ்கோடி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

எழுத்தாளர் கவிஞர் புதிய மாதவி, இந்தியப் பேனா நண்பர் பேரவைத் தலைவர் மா. கருண், மராத்திய மாநில எழுத்தாளர் மன்றத் தலைவர் வதிலை பிரதாபன், டோம்பிவிலி தமிழ் மக்கள் சங்கம் நெல்லை பைந்தமிழ், இலக்கியக் கூடம் வ.ரா. தமிழ்நேசன், மகிழ்ச்சி மகளிர் பேரவை வளர்மதி கணேசன், தானே தமிழ்ச் சங்கம் கி.வீரமணி ஆகியோர் கருத்துரையாற்றினர்.

பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ. இரவிச்சந்திரன் நன்றியுரையாற்றினார். விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக பேராயர் இரவிகுமார் ஸ்டீபன் திராவிட மறுமலர்ச்சி நடுவம் அ. பாலசுப்பிரமணியம் திராவிடக் கருத்தியலாளர் சாலமோன் ராஜா விடுதலை சிறுத்தைகள் கட்சி டி.அப்பாதுரைதமிழ் இரயில் பயணிகள் நலச் சங்கம் ஜனா ராஜாஇளங்கோ தமிழ் இரயில் பயணிகள் நலச் சங்கம், செலின் ஜேக்கப் மூத்த நிர்வாகி, பிரைட் மேல்நிலைப் பள்ளி, பூலான்குளம் ஜெ.சுகுமாறன் தமிழ்க் காப்போம், பெரியார் பாலா திராவிடர் கழகம் முத்தமிழ் தண்டபாணி முத்தமிழ் மன்றம்அம்பர்நாத், க.நந்த கோபால் வருவாய்த் துறை,

வெ.இராசேந்திரன் டோம்பிவிலி தமிழ் மக்கள் சங்கம், வெ. சதானந்தன் கல்யாண் நற்பணி மன்றம், வேல்முருகன் திவா தமிழ்ச் சங்கம் சுரேஷ்குமார் சமுகச் செயற்பாட்டாளர், தாராவி, அழகுராஜா கோலிவாடா, ஜஸ்டினா ஜேம்ஸ் முதல்வர், பிரைட் மேல்நிலைப் பள்ளி, முனைவர் குமாரசெல்வன் பிரைட் மேல்நிலைப் பள்ளி, அமலா ஸ்டான்லி கல்வியாளர், நங்கை குமணராசன் இலெமுரியா அறக்கட்டளை, சிறீதர் தமிழன் விழித்தெழு இயக்கம், வேலுமயில் நயினார் அம்பர்நாத், அ.மகேந்திரன் பகுத்தறிவாளர் கழகம், க.அறச்செல்வன் பகுத்தறிவாளர் கழகம், சிவ.நல்லசேகரன் முலுண்டு, சு.சுதாகரன் எழுத்தாளர் கோ.சீனி வாசகம் மலாடு தமிழ்ச் சங்கம், சுப்பிரமணியன் தானே தமிழ்ச் சங்கம் எஸ்.எஸ். தாசன் பாண்டுப் தமிழ்ச் சங்கம், உ.பன்னீர்செல்வம் விழித்தெழு இயக்கம், த.செ.குமார் தமிழர் நற்புறவுப் பேரவை, ஆ.டென்சிங் தொழிலதிபர் ப.மிக்கேல் அந்தோணி தமிழ்க்காப்போம்,

சங்கர் திராவிட் மனித நேய இயக்கம் இல.முருகன் ஜெரிமெரி தமிழ்ச் சங்கம், சுமதி மதியழகன் மகிழ்ச்சி மகளிர் பேரவை கவிஞர் இராசு. மாதவன் எழுத்தாளர், நெல்லை நாதன் நவி மும்பை டி.எம்.எஸ். நரசிம்மன் பின்னணிப் பாடகர், சிற்றரசு பகுத்தறிவாளர் கழகம் டாக்டர் பெருமாள் தானே தமிழர் சங்கம், வழக்கறிஞர் க.கணேசன் எழுத்தாளர் இல.பாஸ்கர் மலாடு தமிழர் நலச் சங்கம், இர. இராசேந்திரன் ஆரே காலனி டாக்டர் சீனிவாசன் உலகத் தமிழ்க் கழகம் ஆகியோர் இதில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.



சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி, மடிப்பாக்கம் அ.தி.மு.க.வை சார்ந்த டி.சந்திரசேகர், என்.கோகுலகிருஷ்ணன், பி.உதயகுமார், கார்த்திக், ஜெயராஜ் ஆகியோர் அ.தி.மு.க.வில் இருந்து தங்களை விடுவித்து கொண்டு அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்ததையடுத்து சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், எம்.எல்.ஏ.வை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அதுபோது பகுதிச் செயலாளர் எஸ்.வி. ரவிச்சந்திரன், 187 வது வட்ட செயலாளர் எம்.கே.ஜெய், மாவட்ட பிரதிநிதி எம்.கே.ராமகிருஷ்ணன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஈஸ்வர மூர்த்தி, பகுதி துணைச் செயலாளர் திலகவதி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன், பகுதி அமைப்பாளர் அருண்குமார், விவேக், சுரேஷ், விசுவநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் – கழக தலைவர் அவர்களின் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை திருவள்ளூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் அறிவுறுத்தலின் பேரில் பாகம் எண் 256 போந்தவாக்கம் ஊராட்சியில் சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் நா.செல்வசேகரன் கலந்து கொண்டு உறுப்பினர் வீடு வீடாக சென்று மக்களுடன் உரையாடி கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உறுப்பினர்களை சேர்த்தார். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சமூக நீதி, மாநில சுயாட்சி உள்ளிட்டவைகளுக்கு

# நாடாளுமன்றத்தில் குரலெழுப்ப வாய்ப்பு வழங்கிய முதல்வருக்கு நன்றி!

## மாநிலங்களவையில் மு.சண்முகம் பேச்சு!

*புதுடெல்லி, ஜூலை 28 -*

சமூகநீதி, மாநில சுயாட்சி போன்றவற்றிற்கு நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க வாய்ப்பு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி என்றும் ஒடுக்கப்பட்டவர்களின் - தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி என்றும் மாநிலங்களவை உறுப்பினர் விடைபெறும் நிகழ்வில் மு.சண்முகம் உரையாற்றினார்.



நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடைபெறும் நிகழ்வில் சில வார்த்தைகள் சொல்ல எனக்கு ஒரு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி.

என் சிறு வயதிலிருந்தே, சுயமரியாதை இயக்கத்தால் நான் ஈர்க்கப் பட்டேன். தந்தை பெரியாரின் போற்றுதலுடன் என் வாழ்க்கையைத் தொடங்கினேன், என் பள்ளி நாட்களில் அவரைச் சந்தித்தேன். உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு, நான் இந்திய ராணுவத்தில் சேர்ந்தேன், சீன ஆக்கிரமிப்பு மற்றும் பாகிஸ்தான் போரின் போது பணியாற்றினேன்.

ராணுவத்தில் ஒரு குறுகிய சேவைக்குப் பிறகு, எனது அரசியல் வாழ்க்கை, சமூக சேவை மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தொடங்கினேன். கடந்த 45 ஆண்டுகளாக, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை (திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிலாளர் பிரிவு) என்ற தொழிற்சங்கத்தில் பணியாற்றி வருகிறேன். எங்கள் சகாக்கள், முன்னாள் தலைவர்கள் மற்றும் பொதுச்செயலாளர்களின் அனைத்து முயற்சிகளாலும், அது மத்திய தொழிற்சங்கமாக விரிவுபடுத்தப்பட்டது. இப்போது, 19 மாநிலங்களில் எங்களிடம் ஏராளமான தொழிற்சங்க அலுவலகங்கள் உள்ளன

தொழிலாளர் நிலை க்குழுவின் உறுப்பினராக, நான் அதிக பங்களிப்பு களைச் செய்ய விரும்பி னேன், தொழிலாளர் நிலைக் குழுவை நோக்கமுள்ள தாகவும் சக்திவாய்ந்த கண்காணிப்பு அமைப்பாகவும் மாற்ற விரும்பினேன். இருப்பினும், நேரமின்மை மற்றும் வரையறுக்கப்பட்ட தொடர்பு மற்றும் விவாதங்கள் காரணமாக, உறுப்பினர்கள் விரும்பினாலும், குழுவால் அதிகம் வழங்க முடியவில்லை.

இந்த மகத்தான அவையில் தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த எனக்கு வாய்ப்பளித்த எங்களது தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் நண்பரும் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவரும் எனது நலம்விரும்பியான திருச்சி சிவா மற்றும் பிற உறுப்பினர்களின் வழிகாட்டுதலின் கீழ், நான் திறம்பட செயல்பட முடிந்தது, மேலும் பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் நலனுக்காக குரல் கொடுத்தேன், மேலும் அவர்களின் வேலைப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் EPF-95 திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை அதிகரிப்பதன் அவசியத்தை அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இந்தியா ILO-வில் உறுப்பினராக இருந்தாலும், சங்கம் அமைக்கும் உரிமை மற்றும் கூட்டுப் பேரம் பேசும் உரிமைக்கான தீர்மானத்தை தொழிலாளர்களின் அடிப்படை உரிமையாக இன்னும் அங்கீகரிக்கவில்லை.

நமது மாபெரும் திராவிடத் தலைவர் பேரறிஞர் அண்ணா, மாநில சுயாட்சி, கூட்டாட்சிக் கொள்கைகள், சமூக நீதி போன்றவற்றின் மீது உருக்கமான உரைகளை நிகழ்த்திய இந்த மாண்புமிகு அவையில், முக்கியமான பிரச்சினைகளை எழுப்பி உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என்று சொல்வதில் பெருமை கொள்கிறேன்.

மக்களின் முக்கியமான பிரச்சினைகளை எழுப்புவதற்கும், ஒடுக்கப் பட்ட மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சமூக நீதி மற்றும் தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பாதுகாப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்கிய எனது அனைத்து சக உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்பு கிறேன். மாண்புமிகு மாநிலங்களவை துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் மற்றும் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மற்றும் மாநிலங்களவை செயலாளர் மற்றும் அவரது முழு குழுவினருக்கும் நன்றி தெரிவிக்க விரும்பு கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# புழல் ஒன்றிய தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## சேலம் சுஜாதா – தக்கோலம் தேவபாலன் சிறப்புரை! வழக்கறிஞர் ச.அற்புதராஜ் முன்னிலை!

*மாதவரம், ஜூலை 28-*

சென்னை வடகிழக்கு மாவட்டம், புழல் ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழ் விடியலின் கொள்கை சூரியன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (29.7.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணி அளவில் அழிஞ்சி வாக்கம் ஊராட்சியில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு ஆஷா கல்வி நாதன், ப.சிவகுமார், பி.கல்வி நாதன், வழக்கறிஞர் வே.முரளி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

புழல் ஒன்றியக் கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ச.அற்புதராஜ், ஆர். செல்வ மணி, ஜெ.ஜெய்மதன், இரா.முருகன், எம். அண்ணாதுரை, ராஜேஸ்வரி எத்திராஜ், ஆர்.வெங்கடேசன், நா.ஜெகதீசன், மூ. ரமேஷ், தங்கமணி திருமால், சாந்தி பாஸ்கரன், செல்வி மதுரை முத்து, எஸ். உதயகுமார், தேவதாஸ், ஜி.சேகர், ஜி.முரளி, பி.பாஸ்கரன், எஸ்.சங்கர், சி.மதுரை முத்து, ஜி.சுரேந்தர், எஸ். விஜி, வி.பார்த்திபன், தமிழ் மலை, எம்.சுப்பிரமணி, கே.மனோஜ் குமார், யு.உதயகுமார், சகிலா சேகர், க.ஈஸ்வரி, டி.காயத்ரி, எம் டிசி சேகர், எம் டி சி சுகுமார், எஸ்.கமல், எம்.சீனிவாசன், ஆதி முருகன், வி. வேலாயுதம், ஜி.ராஜ்குமார், எஸ்.டி.சதீஷ், ஏ.ராஜா, ஆர். ஹரிஹரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார்.

மேலும் இக்கூட்டத்தில் மாநில பிரச்சாரக் குழு செயலாளர் சேலம் சுஜாதா, தலைமைக் கழகப் பேச்சாளர் தக்கோலம் தேவபாலன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் ப.மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், டி. இராமகிருஷ்ணன், மு.ராஜேந்திரன், பி.அறிவழகி பாலகிருஷ்ணன், எம்.ஆனந்தன், என்.பரந்தாமன், டி.எ. ராஜி, இரா.முருகேசன், பி. சாந்தி, தி.மு.தனியரசு, ஏ. வி.ஆறுமுகம், ஜி.துக்காராம், எஸ்.நந்தகோபால், ஜி. ராஜேந்திரன், புழல் எம். நாராயணன், வை.ம.அருள்தாசன், மீ.வே.கர்ணாகரன், மோரை ஜி.தயாளன், பெ. சரவணன், தமிழரசி குமார், ஆர்.இ.ஆர்.விப்ரநாராயணன், ஆர்.டி.மதன் குமார், எஸ்.ஏ.சீனிவாசன், ஜி.கே. இனியன், இரா.ஏ.பாபு, மோரை சதீஷ், திராவிட மணி, பி.கமலக்கண்ணன், ஜெ.கபிலன், டி.ஆர்.சாம், ஏ.ஆனந்தன் மற்றும் என். ராமு, ச.பாரதி, சரவணன், தமிழ்ச்செல்வி, ரமேஷ், ஆஷா கல்வி நாதன், பி. சிவக்குமார், இ.பாஸ்கரன், சி.ஏழுமலை,

என்.எம்.டி.கோபால், ஜே.முருகன், ஆர்.டி.குமார், மா.மணி, வி.பாரதி, இரா. கருணாநிதி, சரஸ்வதி அருள் தேவநேசன், வடகரை விஜி, எஸ்.குணசேகரன், ஏ.டில்லி பாபு, ஜே. தங்கராஜ், ஜி.காமராஜ், சகாதேவன், ஜெ. ரகுகுமார், மல்லி ராஜா, ஆர். கணேசன், ஆர்.நாகராஜ், பி.நந்தகுமார் மற்றும் முன்னாள் புழல் ஒன்றிய தலைவர்கள், கவுன்சிலர்கள், வார்டு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், செங்குன்றம் பேரூர் கழக நிர்வாகிகள், ஒன்றிய அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், BLA2 நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், BDA நிர்வாகிகள், அழிஞ்சிவக்காம் கழக செயல் வீரர்கள், மற்றும் மகளிர் அணிகள், புள்ளிலைன் ஊராட்சி, தீர்த்தங்கிரியம் பட்டு ஊராட்சி, கிரான்ட்லைன் ஊராட்சி, வடகரை ஊராட்சி, வில்லங்காடுப்பாக்கம் ஊராட்சி, சென்றம்பாக்கம் ஊராட்சி கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக ஆர்.ஐயப்பன், ஏ.தினேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டம் மாமன்ற உறுப்பினர் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் 2024/2025 வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 8.2 லட்சம் மதிப்பீட்டில் எண்ணூர் நெடுஞ்சாலை வைத்தியநாதன் மேம்பாலம் அருகில் வைக்கப்பட்ட கோபுர கடிகாரம் திறந்து வைக்கப்பட்டது. ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், எஸ்.எல்.சுந்தர், சசிகுமார், ராஜன், மாஸ்.டி.வெங்கடேசன், பி.சீனிவாசன், என்.லோகநாதன், ஜி.கோவிந்தராஜ், ஏ.டி.மணி, எம்.விமலா, எஸ்.கிருஷ்ணன், ஏ.முருகேசன், எம்.சரஸ்வதி, ஆர்.சுந்தர்ராஜ், சுனில், மற்றும் கழக தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.